# பெரியோர் ஓய்வுநாட் பள்ளிப் பாடங்கள்

முதலாம் காலாண்டு, 2018

## உக்கிராணத்துவம்: இருதயத்தின் நோக்கங்கள்


1. லௌகீகத்தின் தாக்கம் (டிசம்பர் 30-ஜனவரி 5) ....6
2. பார்க்கிறேன், பிடிக்கிறது, எடுக்கிறேன் (ஜனவரி 6–12) .... 14
3. தேவனா, உலகப்பொருளா (ஜனவரி 6–19) .... 22
4. உலக மரபுகளைவிட்டுத் தப்புதல் (ஜனவரி 20–26) .... 30
5. ஏதேனுக்கு பிறகு வந்த உக்கிராணக்காரர்கள் (ஜனவரி 21–பெப்ரவரி 2) .... 38
6. உக்கிராணக்காரனின் அடையாளங்கள் (பெப்ரவரி 3–9) .... 46
7. தேவனிடம் நேர்மை (பெப்ரவரி 10–16) .... 54
8. தசமபாகத்தின் தாக்கம் (பெப்ரவரி 17–23) .... 62
9. நன்றிப்பெருக்கின் காணிக்கைகள் (பெப்ரவரி 24–மார்ச் 2) .... 70
10. உக்கிராணத்துவத்தின் பங்கு (மார்ச் 3–9) .... 78
11. கடன்: ஓர் அனுதின தீர்மானம் (மார்ச் 10–16) .... 86
12. ஓர் உக்கிராணக்காரனின் பழக்கவழக்கங்கள் (மார்ச் 17–23) .... 94
13. உக்கிராணத்துவத்தின் விளைவுகள் (மார்ச் 24–30) .... 102



பாட ஆசிரியர்

**ஜாண் எச்.எச். மேத்யூஸ்**

தமிழாக்கம்

மார்சல் ஐசக்



**தென்கிழக்கு இந்திய ஒன்றியம்**

**செவந்த்-டே அட்வென்ட்டிஸ்ட் திருச்சபை**

197, ஜீ. எஸ். டி. சாலை, வண்டலூர், சென்னை – 600 048



# கிறிஸ்தவ உக்கிராணத்துவ வாழ்க்கை

கிறிஸ்தவர்கள் தங்கள் பாவநிலையை உணரவேண்டும்; அப்போதுதான் தங்களில் மாற்றம் அவசியமென்பது தெரியும். கிறிஸ்து நமக்குள் கிரியைசெய்வதால் மட்டுமே அந்த மாற்றத்தை முற்றிலுமாக நாம் பெறமுடியும். உக்கிராணத்துவ விஷயத்தில் மாற்றத்தை உண்டாக்கவும் அவர் நமக்குள் கிரியைசெய்கிறார். உக்கிராணத்துவத்தில், கிறிஸ்தவ வாழ்க்கையின் பல்வேறு அம்சங்கள் சம்பந்தப்பட்டுள்ளன; இப்போது, நம்மிடமுள்ள உலகப்பொருட்களையும், தொட்டுணரமுடியாத விஷயங்களையும் தேவ மகிமைக்கேதுவாக நிர்வகிப்பதுபற்றி விரிவாகப் பார்க்கப்போகிறோம்.

பொருளாசை அல்லது உலக ஆசையால் உண்டாகும் ஆபத்துகளிலிருந்து நம்மைப் பாதுகாப்பதற்கான பல வழிகளை வேதாகமம் காட்டுகிறது; அவற்றில் உக்கிராணத்துவம் மகத்தானது! ஆத்துமாக்களின் எதிரியானவன் விரிக்கிற ஆவிக்குரிய கண்ணிகளில் பொருளாசையும் உலக ஆசையும் உண்டு. தரமற்ற, செயற்கையாக சுவையூட்டப்பட்ட பண்டங்கள் போன்றவைதாம் சொத்துகளும் உடைமைகளும்; சீக்கிரமே தரங்கெட்டுப் போகக்கூடியவை; ஆனால், அநேகர் இதை உணர்வதில்லை. உலக ஆசையிலிருந்து விடுபடமுடியாமல் பல ஆத்துமாக்கள் தொலைந்துபோக இருப்பதுதான் வேதனையானது. உலகத்தின் வழிகளான மாம்சத்தின் இச்சை, கண்களின் இச்சை, ஜீவனத்தின் பெருமை போன்றவற்றை அடக்கி, அவற்றை வெளியேற்றுவதற்கு ஒரு வழி இருக்கிறது; உக்கிராணத்துவ நியதிகளின்படி வாழ்வதுதான் அது.

அதனால்தான் உக்கிராணத்துவம் பற்றியும், தேவன் விரும்புகிறபடி நாம் வாழ உக்கிராணத்துவம் என்ன கற்றுத்தருகிறது என்பதுபற்றியும் இந்தக் காலாண்டில் படிக்கப் போகிறோம்; உலக ஆசையிலிருந்தும் அதன் சகல விஷ்வரூபங்களிலிருந்தும் நாம் விடுதலைபெற்றாகவேண்டும். உண்மையிலேயே நாம் இயேசுவைப் பின்பற்றுகிறவர்களாயிருந்தால் அது நம் அனுதின வாழ்க்கையில் வெளிப்படும்; அதுதான் உக்கிராணத்துவம். அது தேவன்மேலான நம் அன்பின் வெளிப்பாடு; கிறிஸ்துவுக்குள் நமக்குக் கொடுக்கப்பட்டுள்ள சத்தியத்தின்படி நாம் வாழ்வதைக் காட்டுகிற வழிகளில் ஒன்று. தேவன் முந்தி நம்மில் அன்புகூர்ந்ததாலேயே நாம் அவருடைய உக்கிராணக்காரர்களாக வாழமுடிகிறது.

எனவே, நம்முடைய மனநிலை, மனமாற்றம், அர்ப்பணிப்பு, சுய ஒழுக்கம், போன்ற அநேக விஷயங்கள் உக்கிராணத்துவ வாழ்க்கையில் அடங்கும். தேவனுடைய

உண்மையான, நம்பிக்கைக்குரிய ஊழியக்காரர்களாக நாம் வாழவேண்டும்; நம் சொல்லிலும் செயலிலும் இயேசுவை முன்வைத்தவர்களாக, சுயநலமற்ற வாழ்க்கை வாழவேண்டும். உக்கிராணத்துவ வாழ்க்கையானது நீதியான வாழ்க்கையில் முடியுமென்பதை கிறிஸ்து காணச்செய்வார். தேவனுடைய ஊழியப்பணியை நிறைவேற்றுவதற்கு நிதியுதவிசெய்து, அவருடைய மகிமைக்காகவே அவருடைய உடைமைகளைப் பயன்படுத்துகிற விதங் குறித்து நாம் கற்றுக்கொள்ளவேண்டும்.

தேவனுடைய உக்கிராணத்துவக்காரர்கள் இப்போது, கண்ணாடியிலே நிழலாட்டமாய்ப் பார்க்கிறார்கள்; ஆனால், இயேசுவோ தெளிவாகப் பார்க்கிறார். 1கொரி 13:12. நம்மை நம்பி, தம்முடைய ஊழியத்தை ஒப்படைத்திருக்கிறார். உலகின் மருட்சிகள் நம்மை நெருக்கினாலும், நம் தாலந்துகளையும் நிதிகளையும் ஆரோக்கியத்தையும் சூழ்நிலையையும் முறையாக நிர்வாகம் செய்யவேண்டியது நம் கடமையாகும். உக்கிராணத்துவக்காரர்களாக நம்முடைய பொறுப்புகள் என்ன? தேவனுடைய கிருபையால் அந்தப் பொறுப்புகளை எவ்வாறு நாம் நிறைவேற்றலாம்? இரட்சிப்பைப் பெற்றுக்கொள்வதற்காக அல்ல, ஏற்கனவே அதைப் பெற்றிருப்பதின் பலனாகவே அந்தப் பொறுப்புகளை நிறைவேற்றுகிறோம். இவை போன்றவற்றை வலியுறுத்துவதே இப்பாடத்தின் நோக்கம்.

**உண்மையில் நாம் இயேசுவைப் பின்பற்றுகிறோமா என்பது நம் அனுதின வாழ்க்கையில் வெளிப்படும்; அதுதான் உக்கிராணத்துவம். அது தேவன் மேலான நம் அன்பின் வெளிப்பாடு.**

கிறிஸ்தவ உக்கிராணத்துவ வாழ்க்கை வாழும்போது, தேவனுடைய குணத்தை உலகிற்குப் பிரதிபலிக்கிறோம். நம் கலாச்சாரத்தின் போக்குகளும், வழக்கங்களும் எப்படியும் இருக்கட்டும்; அவற்றிற்கு எதிராக, வேதாகம நியதிகளில் உறுதியாக வாழும்போது, அந்த வாழ்க்கை அருமையானதாக, சந்தோஷமானதாக, பரிசுத்தமானதாக இருக்கும். பக்தியற்ற வாழ்க்கைமேல் எல்லாருக்குமே ஈர்ப்பு இருக்கிறது; நேரடியாகவும் மறைமுகமாகவும் பல வழிகளில் சோதனைகள் நம்மை நெருக்குகின்றன. கிறிஸ்தவ உக்கிராணத்துவக்காரர்கள் இவற்றிலிருந்து தப்புவதற்கான வழிகள் சொல்லப்பட்டுள்ளன; தப்புவதற்கான வல்லமை கிடைக்குமென்றும் வாக்களிக்கப்பட்டுள்ளது.

கீழுள்ள இரண்டில், ஏதாவது ஒன்றுக்கு ஆளாவோம். ஒன்று, “அக்கிரமச் செய்கைக்காரரே, என்னைவிட்டு அகன்றுபோங்கள்” என்று சொல்லுவார். (மத்தேயு 7:23) அல்லது, “நல்லது, உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே, கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய், அநேகத்தின்மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன்; உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி” என்று சொல்லுவார். மத்தேயு 25:23.

“உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி” என்று நம்மிடம் சொல்லவேண்டும்; அப்படியொரு வாழ்க்கை வாழ்வதற்கு இந்தக் காலாண்டின் பாடம் உதவியாக இருக்கவேண்டும் என்று ஜெபிப்போம்; நம்புவோம்.

*இப்பாடத்தின் ஆசிரியர் ஜாண் எச்.எச். மேத்யூஸ், D.Min.,. இவர் ஆண்ட்ரூஸ் பல்கலைக்கழகத்தில் பணியாற்றுகிறார். அபிஷேகிக்கப்பட்ட ஊழியராக ஃப்ளாரடா, அலபமா, ஐயோவா, மிசௌரீ, டெனஸீ, நப்ரஸ்கா போன்ற இடங்களில் போதகராக ஊழியம் செய்திருக்கிறார். இன்று, வடஅமெரிக்காடிவிஷனின் உக்கிராணத்துவ ஊழிய இலாகாவின் இயக்குனராக இருக்கிறார்.*

# மனன வசனங்கள்

1 நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறித்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள். ரோமர் 12:2.

2 முள்ளுள்ள இடங்களில் விதைக்கப்பட்டவன், வசனத்தைக் கேட்கிறவனாய் இருந்தும், உலகக் கவலையும் ஐசுவரியத்தின் மயக்கமும் வசனத்தை நெருக்கிப் போடுகிறதினால், அவனும் பலனற்றுப்போவான். மத்தேயு 13:22.

3 ஆதலால், தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால்யாவும் முடங்கும்படிக்கும், பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசுகிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கைபண்ணும் படிக்கும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார். பிலி 2:9-11.

4 கோபாக்கினை நாளில் ஐசுவரியம் உதவாது; நீதியோ மரணத்துக்குத் தப்புவிக்கும். தன் ஐசு வரியத்தை நம்புகிறவன் விழுவான்; நீதிமான்களோ துளிரைப்போலே தழைப்பார்கள். நீதி 11:4,28.

5 சுவிசேஷத்தை எங்களிடத்தில் ஒப்புவிக்கத்தக்கதாய், தேவன் எங்களை உத்தமர் என்று எண் ணினபடியே, நாங்கள் மனுஷருக்கு அல்ல, எங்கள் இருதயங்களைச் சோதித்தறிகிற தேவனுக்கே பிரியமுண்டாகப் பேசுகிறோம். 1தெச 2:4.

6 எந்த மனுஷனும் எங்களைக் கிறிஸ்துவின் ஊழியக்காரரென்றும், தேவனுடைய இரகசியங் களின் உக்கிராணக்காரர் என்றும் எண்ணிக்கொள்ளக்கடவன். மேலும், உக்கிராணக்காரன் உண்மை உள்ளவன் என்று காணப்படுவது அவனுக்கு அவசியமாம். 1கொரி 4:1,2.

7 நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டவர்கள் வசனத்தைக் கேட்டு, அதை உண்மையும் நன்மையு மான இருதயத்திலே காத்துப் பொறுமையுடனே பலன் கொடுக்கிறவர்களாய் இருக்கிறார்கள். லூக்கா 8:15.

8 ஆசாரிய ஊழியஞ்செய்கிறவர்கள் தேவாலயத்திற்கு உரியவைகளில் புசிக்கிறார்களென்றும், பலிபீடத்தை அடுத்துப் பணிவிடை செய்கிறவர்களுக்குப் பலிபீடத்தில் உள்ளவைகளில் பங்கு உண்டென்றும் அறியீர்களா? அந்தப்படியே சுவிசேஷத்தை அறிவிக்கிறவர்களுக்குச் சுவிசேஷத்தினாலே பிழைப்பு உண்டாகவேண்டும் என்று கர்த்தரும் கட்டளை இட்டிருக்கிறார். 1கொரி 9:13,14.

9 தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார். யோவான் 3:16.

10 தேவன் நம்மை அசுத்தத்திற்கல்ல, பரிசுத்தத்திற்கே அழைத்திருக்கிறார். 1 தெச 4:7.

11 யாவருக்கும் செலுத்தவேண்டிய கடமைகளைச் செலுத்துங்கள்; எவனுக்கு வரியைச் செலுத்த வேண்டியதோ, அவனுக்கு வரியையும், எவனுக்கு தீர்வைச் செலுத்தவேண்டியதோ அவனுக்கு தீர்வையும் செலுத்துங்கள். ஒருவரிடத்திலொருவர் அன்புகூருகிற கடனே அல்லாமல், மற் றொன்றிலும் ஒருவனுக்கும் கடன்படாதிருங்கள்; பிறனிடத்தில் அன்புகூருகிறவன் நியாயப் பிரமாணத்தை நிறைவேற்றுகிறான். ரோமர் 13:7,8.

12 வாலிபன் தன் வழியை எதினால் சுத்தம்பண்ணுவான்? உமது வசனத்தின்படி தன்னைக் காத்துக்கொள்ளுகிறதினால் தானே. என் முழு இருதயத்தோடும் உம்மைத் தேடுகிறேன், என்னை உமது கற்பனைகளை விட்டு வழிதப்பவிடாதேயும். நான் உமக்கு விரோதமாய்ப் பாவஞ் செய்யாதபடிக்கு, உமது வாக்கை என் இருதயத்தில் வைத்து வைத்தேன். சங் 119:9-11.

13 புறஜாதிகள் உங்களை அக்கிரமக்காரரென்று விரோதமாய்ப் பேசும் விஷயத்தில், அவர்கள் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு அவற்றினிமித்தம் சந்திப்பின் நாளிலே தேவனை மகிமைப் படுத்தும்படி நீங்கள் அவர்களுக்குள்ளே நல்நடக்கை உள்ளவர்களாய் நடந்துகொள்ளுங்கள். 1பேதுரு 2:12.